## ஜெர்மனியில் பழங்காலக் கார்களைக் கண்டு

# வரலாறு மீண்டும் உயிர்பெற்றதாய் உணர்ந்தேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**டசெல்டோர்ஃப் , செப். 3 -**

**ஜெர்மனியில் பழங்காலக் கார்களைக் கண்டு வரலாறு மீண்டும் கண்முன் உயிர்பெற்றதாய் இருந்தது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

ஜெர்மனி நாட்டின் டசெல்டோர்ஃப் நகரில் அமைந்துள்ள 'Classic Remise' அரிய கார்களுக்கான மையத்தினை பார்வையிட்ட பின்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:










டசெல்டோர்ஃப் நகரில் அமைந்துள்ள 'Classic Remise' அரிய கார்களுக்கான மையத்தினூடே நடந்து செல்வது பழைய காலத்துக்கே பயணித்துச் சென்றதுபோன்ற உணர்வைத் தந்தது.

**இந்தியாவின் டெட்ராய்ட்டாகத் திகழும் சென்னை!**

இந்தியாவின் டெட்ராய்ட்டாகத் திகழும் சென்னையில் இருந்து, ஆட்டோமொபைல் துறையில் புதுமைகளைப் புகுத்தும் பெருமைக்குரிய மரபைக் கொண்ட ஜெர்மனிக்குச் சென்று, உலகின் முதல் கார், பழமையான பந்தயக் கார் உள்ளிட்டவற்றை அருகில் பார்த்த பெறற்கரிய இன்பத்தை அடைந்தேன்.

பழம் பொக்கிஷங்களுக்கிடையே நின்று அவற்றைக் காண்கையில், வரலாறு மீண்டும் கண்முன் உயிர்பெற்றதைப் போல இருந்தது. இறந்த காலத்தின் அறிவுக்கும் எதிர்காலத்துக்கான கற்பனைக்கும் இடையே ஓயாமல் நடக்கும் உரையாடலை உணர்ந்தேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றம்: தமிழ்நாட்டில்

# இந்தியாவிற்கே முன்னோடியாக செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் - சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.3–**

**தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டது குறித்தும், இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், "சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறிய 505 வாக்குறுதிகளில், நமது திராவிட மாடல் அரசு 364 வாக்குறுதிகளை நிறைவேற்றி, 40 வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளதைத் தக்க தரவுகளோடு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு , எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் கோவி.செழியன் ஆகியோர் விளக்கியுள்ளனர்.

இன்னும் ஒருபடி மேலே சொன்னால், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற இந்தியாவுக்கே முன்னோடியாகச் செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் - தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்படாதவை.

முந்தைய ஆட்சியின் பத்தாண்டுகால நிதி நிர்வாகச் சீர்கேடு, கொரோனா நெருக்கடி, தமிழ்நாட்டை வெல்ல முடியாத ஒன்றிய பா.ஜ.க. வன்ம அரசின் ஓரவஞ்சனை போன்ற தடைகளைக் கடந்து, சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளோம்!

எளிதில் அணுகும் தன்மை (Accessibility) , பதில் கூறும் பண்பு (Accountability), வெளிப்படைத் தன்மை (Transparency), அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகம், (Inclusivity), பொறுப்புணர்வு (Responsibility), நீடித்து நிலைக்கும் தன்மை (Sustainability) இதுதான் தி.மு.க.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த ஒன்றுபட்ட திருச்சி மாவட்டம், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் மற்றும் திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள் கூட்டம் இன்று (03.09.2025) காலை 10.00 மணியளவில் திருச்சியி லுள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் கே.என்.நேரு**
மண்டலப் பொறுப்பாளர்
கழக முதன்மைச் செயலாளர், தி.மு.க.

## திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க., நான்கு சட்டமன்றத் தொகுதிகளின்

# பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்!

திருவண்ணாமலை, செப். 3 –

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

02.09.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30மணிக்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், கலசப்பாக்கம், செங்கம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, பா.செந்தமிழ்ச்செல்வன், டாக்டர் மாலதி நாராயணசாமி, எஸ்.பி. மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந்தரராசன், ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், மெய்யூர் சந்திரன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன் மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் நன்றி கூறினார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவளூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர். க. குமணன். ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சித்ரா பாபு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## ஆளுநரின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டவை –

# கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதம்!

புதுடெல்லி, செப். 3 –

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க கால நிர்ணயம் செய்த தீர்ப்புக்கு எதிராக குடியரசுத் தலைவர் மூலம் ஒன்றிய பாஜக அரசு கேள்வி எழுப்பிய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி வாதங்களை முன்வைத்தார்.

ஆளுநர் திருப்பி அனுப்பும் மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பும் அதிகாரம் சட்டப்பேரவைக்கு உள்ளது. அதே போன்று மாறும் சூழ்நிலை, கொள்கை காரணமாக அதனை மீண்டும் நிறைவேற்றாமல் கைவிடும் அதிகாரம் சட்டப்பேரவைக்கே உள்ளது.

ஆட்சி மாற்றம் அல்லது கொள்கை மாற்றம் என்று ஆளுநர் மசோதாவை நிறுத்தி வைக்க அல்லது கைவிட அதிகாரம் இல்லை. ஆளுநர் தனிப்பட்ட முறையில் எந்த மசோதா மீதும் முடிவு எடுக்க முடியாது. ஆளுநர் சூப்பர் முதலமைச்சராக நினைத்து செயல்பட முடியாது.



அரசியல் சாசன பிரிவு 200 ஐ தாண்டிய எந்த அதிகாரமும் ஆளுநருக்கு இல்லை என்று அபிஷேக் சிங்வி வாதிட்டார். ஆளுநர் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டவை.

கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. சட்டமன்றம் கூடாத நேரங்களில் அமைச்சரவை, முதலமைச்சரின் ஆலோசனைப்படி அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் 213 வது அரசியல் சாசன பிரிவு ஆளுநருக்கு அதிகாரம் வழங்கி உள்ளது என்று தெரிவித்தார்.

ஆளுநருக்கு தனி அதிகாரம் உள்ளது என்ற ஒன்றிய அரசின் வாதத்தை முழுமையாக நிராகரிப்பதாக தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

நமது அரசியலமைப்பு அத்தகைய தனி அதிகாரங்களுக்கு எதிரானது என்று, அபிஷேக் சிங்வி வாதிட்டார். ஆளுநருக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என்ற ஒன்றிய அரசின் வாதத்துக்கும் அவர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை உறுதி செய்ய உருவாக்கப்பட்ட அமைப்புதான் நீதித்துறை. ஆளுநர் 1,400 நாட்கள் வரை மசோதா மீதான ஒப்புதலை நிறுத்தி வைத்தது தவறு என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் முழு தீர்வையும் வழங்குவது நீதித்துறையின் உரிமை. அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை காக்கும் பணியை நீதிமன்றம் செய்து வருகிறது என்று அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.